ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2512/ 20 - 2026 ඔක්තෝබර් මස 27 වැනි අඟහරුවාදා - 2026.10.27

2512/20 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 27 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டம்

மோட்டார் போக்குவரத்துத் தொழில்

சம்பளச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 136) பிரிவு 28 இன் ஏற்பாடுகளுக்கிணங்க, மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச்சபையானது, மேற்கூறப்பட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 30 ஆல் அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, இத்துடன் உள்ள அட்டவணையில் குறித்துக் கூறப்படுகின்ற அவ்வாறான சம்பளச்சபைத் தீர்மானங்களை மாற்றுவதற்கு முன்மொழிவதாக இத்தால் அறியத்தருகின்றது.

மேற்கூறப்படும் முன்மொழிவுக்கான ஆட்சேபனைகள் 2026.11.16 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அவ்வாறான ஒவ்வொரு ஆட்சேபனையும் எழுத்தில் தரப்பட வேண்டும் என்பதுடன் அது மேற்கொள்ளப்படுவதன் பின்னணி பற்றிய கூற்றொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

எச்.எம்.டி.என்.கே. வட்டலியத்த,
தலைவர்,
மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச்சபை.

தொழில் திணைக்களம்,
"மெஹெவர பியச"
கொழும்பு 05
23.10.2026.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அட்டவணை

மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச்சபையால் ஆக்கப்பட்ட தீர்மானங்கள் 9667 ஆம் இலக்க. 1947 பெப்புருவரி 14 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டதுடன், 2108/35 ஆம் இலக்க, 30.01.2019 ஆம் திகதிய அதிவிஷேட வர்த்தமானியில் இறுதியாக எடுக்கப்பட்ட மாற்றமானது பிரசுரிக்கப்பட்டதுடன், மேலும் பின்வருமாறு பகுதி II இற்குப் புதிய பகுதியை மாற்றீடு செய்வதன் மூலம் மாற்றப்படலும் வேண்டும்.

பகுதி II

ஆகக்குறைந்த மாதச் சம்பளங்கள்

வேலையாட்களின் வகுப்புகள்

வகுப்பு 'A' வேலையாட்கள்
பஸ் ஒன்றில் 22 பிரயாணிகளுக்கும் அதிகமாக ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள சாரதிகள்.

வகுப்பு 'B' வேலையாட்கள்
பஸ் ஒன்றில் 22 பிரயாணிகளை அல்லது அதற்கும் குறைவாக ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள சாரதிகள், ஆம்புலன்ஸ் சாரதி, 20 அந்தருக்குக் கூடுதலான பாரத்தை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள லொறிகளுக்கான (பெருந்தோட்டமொன்றில் உபயோகிக்கப்படுகின்ற அல்லது பெருந்தோட்டான்றினுள் மாத்திரம் உள்ளகப் போக்குவரத்திற்கு உபயோகிக்கப்படுகின்ற லொறி தவிர்ந்த), மற்றும் வான் வண்டிக்கான சாரதிகள்.

வகுப்பு 'C' வேலையாட்கள்
வாடகைக் கார்கள், கெப் கார்கள் ஆகியவற்றின் சாரதிகள், 20 அந்தர் அல்லது அதற்குக் குறைவான பாரத்தை ஏற்றிச் செல்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ள லொறிகள் (பெருந்தோட்டமொன்றில் உபயோகிக்கப்படுகின்ற அல்லது பெருந்தோட்டமொன்றினுள் மாத்திரம் உள்ளகப் போக்குவரத்திற்கு உபயோகிக்கப்படுகின்ற லொறி தவிர்ந்த) மற்றும் வான் வண்டிக்கான சாரதிகள்; பிரேதங்களை ஏற்றும் மோட்டார் வண்டிச் சாரதி.

வகுப்பு 'D' வேலையாட்கள்
போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படும் இழுவை வண்டிகள் கொண்ட டராக்ரர் சாரதிகள்; இழுவை வண்டிகள் கொண்ட லொறிகளின் சாரதிகள் (ஸ்கெமல் குதிரை வண்டி வகையைச் சேர்ந்த; பெருந்தோட்டமொன்றில் உபயோகிக்கப்படுகின்ற அல்லது பெருந்தோட்டமொன்றினுள் மாத்திரம் உள்ளகப் போக்குவரத்திற்கு உபயோகிக்கப்படுகின்ற இழுவை வண்டிகள் கொண்ட லொறி மற்றும் ட்ராக்ரர் தவிர்ந்த).

வகுப்பு 'E' வேலையாட்கள்
பெருந்தோட்டமொன்றில் உபயோகிக்கப்படுகின்ற அல்லது பெருந்தோட்மொன்றினுள் மாத்திரம் உள்ளகப் போக்குவரத்திற்கு உபயோகிக்கப்படுகின்ற பின்வரும் வாகனங்களின் சாரதிகள் - (அ) லொறி, (ஆ) இழுவை வண்டிகள் கொண்ட ட்ராக்ரர்.

வகுப்பு 'F' வேலையாட்கள்
பஸ் சேவைகளில் பணியாற்றும் எழுதுவினைஞர்கள், காசாளர்கள், சீட்டு எழுதுனர்கள் அல்லது ஆசனப் பதிவு எழுதுவினைஞர்கள்.

வகுப்பு 'G' வேலையாட்கள்
20 அந்தருக்கும் அதிகமாகப் பாரமேற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள லொறிகளின் துப்புரவாக்குனர்களும், பொதி ஏற்றுபவர்களும்.

வகுப்பு 'H' வேலையாட்கள்
20 அந்தர் அல்லது அதற்குக் குறைவாகப் பாரமேற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள லொறிகளின், பஸ்களின், வாடகைக் கார்களின், கெப் வண்டிகளின், வான் வண்டிகளின், அம்புலன்ஸ்களின், பிரேதங்களை ஏற்றும் மோட்டார் வண்டிகளின் துப்புரவாக்குனர்களும், பொதி ஏற்றுபவர்களும்.

வகுப்பு 'I' வேலையாட்கள்
பஸ் சரிபார்ப்போரும், நேரம் பதியுனரும்.

வகுப்பு 'J' வேலையாட்கள்
பஸ் பரிசோதகர்களும், பஸ் நிலைய முகாமையாளர்களும்.

வகுப்பு 'K' வேலையாட்கள் -
மேற்கூறியவற்றில் குறிப்பிடப்படாத, மோட்டார் போக்குவரத்துத் தொழில் ஈடுபடுகின்ற ஏனைய எல்லா வேலையாட்களும் -

(அ) "துப்புரவாக்குனர்கள்" என்பது லொறிகளின், பஸ்களின், வாடகைக் கார்களின், கெப் வண்டிகளின், வான் வண்டிகளின், அம்புலன்ஸ்களின், பிரேதங்களை ஏற்றும் மோட்டார் வண்டிகளின் பொறிமுறைகளைப் பேணுவதில் தொடர்புபட்டுள்ள (எழுதுனர்கள் தவிர்ந்த) வேலையாட்களைக் குறிக்கும்.

(ஆ) "பொதி ஏற்றுபவர்கள்" என்பது பஸ்களில், வாடகைக் கார்களில், கெப் வண்டிகளில், வான் வண்டிகளில், அம்புலன்ஸ்களில், பிரேதங்களை ஏற்றும் மோட்டார் வண்டிகளில், அவற்றில் பயணஞ்செய்தவாறு பொதிகளை ஏற்றியிறக்குபவர்களைக் குறிக்கும்.

பகுதி II

மாதமொன்றுக்கென ஆகக்குறைந்த சம்பள அளவுகள்

வேலை வருடம்	வகுப்புகள் 'A' 'D'	வகுப்பு 'B'	வகுப்பு 'C'	வகுப்புகள் 'E' 'F' 'J'	வகுப்புகள் 'G' 'I'	வகுப்பு 'H'	வகுப்பு 'K'
1 ஆவது வருடம்	33525.00	33150.00	32740.00	32440.00	32100.00	31840.00	31500.00
2 ஆவது வருடம்	33925.00	33500.00	33040.00	32690.00	32300.00	32040.00	31700.00
3 ஆவது வருடம்	34325.00	33850.00	33340.00	32940.00	32500.00	32240.00	31900.00
4 ஆவது வருடம்	34725.00	34200.00	33640.00	33190.00	32700.00	32440.00	32100.00
5 ஆவது வருடம்	35125.00	34550.00	33940.00	33440.00	32900.00	32640.00	32300.00
6 ஆவது வருடம்	35525.00	34900.00	34240.00	33690.00	33100.00	32840.00	32500.00
7 ஆவது வருடம்	35925.00	35250.00	34540.00	33940.00	33300.00	33040.00	32700.00
8 ஆவது வருடம்	36325.00	35600.00	34840.00	34190.00	33500.00	33240.00	32900.00
9 ஆவது வருடம்	36725.00	35950.00	35140.00	34440.00	33700.00	33440.00	33100.00
10 ஆவது வருடம்	37125.00	36300.00	35440.00	34690.00	33900.00	33640.00	33300.00
11 ஆவது வருடம்	37525.00	36650.00	35740.00	34940.00	34100.00	33840.00	33500.00
12 ஆவது வருடம்	37925.00	37000.00	36040.00	35190.00	34300.00	34040.00	33700.00
13 ஆவது வருடம்	38325.00	37350.00	36340.00	35440.00	34500.00	34240.00	33900.00
14 ஆவது வருடம்	38725.00	37700.00	36640.00	35690.00	34700.00	34440.00	34100.00
15 ஆவது வருடம்	39125.00	38050.00	36940.00	35940.00	34900.00	34640.00	34300.00

EOG 10-0368